## வள்ளுவன் தமிழ் மையம் (Valluvan Tamil Academy)
## ஆத்திச்சூடி போட்டி விதிமுறைகள் (Aathichoodi Recital Guidelines)

---

ஆத்திச்சூடி போட்டி நமது வளமான இலக்கியங்களை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்தப் போட்டி இளமழலை மற்றும் மழலை (பிரிவு 1), நிலை 1 (பிரிவு 2) மற்றும் நிலை 2 (பிரிவு 3) ஆகியவற்றுக்கானது.

### பொது விதிமுறைகள்:

- ஒவ்வொரு பிரிவின் அடிப்படையில் விதிகள் மாறுபடும். ஆகையால். தயவுசெய்து உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரிவில் கவனம் செலுத்துங்கள்.

- அனைத்து குழந்தைகளும் தங்கள் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச ஆத்திச்சூடியை அடைந்தவுடன் நிறுத்த வேண்டும்.

- ஒவ்வொரு பிரிவின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள ஆத்திச்சூடிகளின் எண்ணிக்கையை விட அதிகமாக ஒப்புவிக்க குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டாம்.

### இளமழலை & மழலை - விதிமுறைகள்:

- கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஆத்திச்சூடியில் இருந்து அதிகபட்சம் 15 ஆத்திச்சூடிகளை ஒப்புவிக்கவும்.
- ஆத்திச்சூடிக்கு பொருள் சொல்லத் தேவையில்லை.
- ஒவ்வொரு ஆத்திச்சூடிக்கும் 2 புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு போட்டியாளருக்கும் 2 நிமிடங்களும், சலுகையாக கூடுதல் 1 நிமிடமும் வழங்கப்படும்.
- இரண்டு நிமிடங்கள் முடியும் பொது முதலாவது மணி ஒலிக்கப்படும்.
- சலுகை நேரம் முடிந்ததும் இரண்டாவது மணி ஒலிக்கப்படும்.
- போட்டியாளர்கள் இரண்டாவது மணி ஒலித்தவுடன் ஆத்திச்சூடி சொல்வதை நிறுத்த வேண்டும்.

## நிலை 1 - விதிமுறைகள்:

- கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஆத்திச்சூடியில் இருந்து அதிகபட்சம் 15 ஆத்திச்சூடிகளை ஒப்புவிக்கவும்.
- 5 ஆத்திச்சூடிகளுக்கு பொருள் சொல்ல வேண்டும்.
- ஒவ்வொரு ஆத்திச்சூடிக்கும் 1 புள்ளி வழங்கப்படும்.
- ஒவ்வொரு ஆத்திச்சூடி பொருளுக்கும் 3 புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு போட்டியாளருக்கும் 2 நிமிடங்களும், சலுகையாக கூடுதல் 1 நிமிடமும் வழங்கப்படும்.
- இரண்டு நிமிடங்கள் முடியும் பொது முதலாவது மணி ஒலிக்கப்படும்.
- சலுகை நேரம் முடிந்ததும் இரண்டாவது மணி ஒலிக்கப்படும்.
- போட்டியாளர்கள்.
- இரண்டாவது மணி ஒலித்தவுடன் ஆத்திச்சூடி சொல்வதை நிறுத்த வேண்டும்.

## நிலை 2 - விதிமுறைகள்:

- கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஆத்திச்சூடியில் இருந்து அதிகபட்சம் 15 ஆத்திச்சூடிகளை ஒப்புவிக்கவும்.
- 10 ஆத்திச்சூடிகளுக்கு பொருள் சொல்ல வேண்டும்.
- ஒவ்வொரு ஆத்திச்சூடிக்கும் 1 புள்ளி வழங்கப்படும்.
- ஒவ்வொரு ஆத்திச்சூடி பொருளுக்கும் 3 புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு போட்டியாளருக்கும் 2 நிமிடங்களும், சலுகையாக கூடுதல் 1 நிமிடமும் வழங்கப்படும்.
- இரண்டு நிமிடங்கள் முடியும் பொது முதலாவது மணி ஒலிக்கப்படும்.
- சலுகை நேரம் முடிந்ததும் இரண்டாவது மணி ஒலிக்கப்படும்.
- போட்டியாளர்கள்.
- இரண்டாவது மணி ஒலித்தவுடன் ஆத்திச்சூடி சொல்வதை நிறுத்த வேண்டும்.

Aathichoodi competition introduces our rich literature to the younger generation. This competition is for **Ilamalazhi and Malazhai** (Category 1), **Nilai 1** (Category 2) and **Nilai 2** (Category 3).

**General Guidelines:**

- The rules change based on category. Please pay attention to your assigned category.
- All kids should stop when they reach the maximum number of Aathichoodi allowed in their category.
- Please do not coach the kids to recite more than the number of Aathichoodi mentioned under each category.

**Rules for Ilamalazhi and Malazhai:**

- Recite a maximum of 15 Aathichoodi from Aathichoodi listed below.
- Meaning for Aathichoodi is not required.
- EachAathichoodicarries1point.
- Time given is 2 minutes and the grace time is 1 minute. At the end of 2 minutes, the 1st timer will ring.
- Second timer will ring after the grace time is over.
- Participants should stop reciting as 2nd timer rings.

**Rules for Nilai1:**

- Recite a maximum of 15 Aathichoodi from Aathichoodi listed below.
- Meaning for minimum 5 Aathichoodi is required.
- Each Aathichoodi carries 1 point.
- Each Aathichoodi meaning carries 3 points.
- Time given is 2 minutes and the grace time is 1 minute. At the end of 2 minutes, the 1st timer will ring.

- Second timer will ring after the grace time is over.
- Participants should stop reciting as 2nd timer rings.

**Rules for Nilai 2:**

- Recite a maximum of 15 Aathichoodi from Aathichoodi listed below.
- Meaning for minimum10 Aathichoodi is required.
- Each Aathichoodi carries 1 point.
- Meaning for each Aathichoodi carries 3 points.
- Each participant will be given 3 minutes. There is a grace period of 1 minute.
- At the end of 3 minutes, the first timer will ring.
- Second timer will ring after the grace time is over.
- Participants should stop reciting as 2nd timer rings.

## AATHICHOODI LIST:

| ஆத்திச்சூடி | விளக்கம் |
|---|---|
| இயல்பு அலாதன செய்யேல் | நல்லொழுக்கத்துக்கு மாறான செயல்களைச் செய்யாதே |
| இளமையில் கல். | இளமை பருவத்தில் இருந்தே கற்கவேண்டியவைகளைத் (**இலக்கணத்தையும் கணிதத்தையும்**) தவறாமல் கற்றுக்கொள். |
| குணமது கைவிடேல் | நன்மை தரக்கூடிய நல்ல குணங்களைப் பின்பற்றுவதை நிறுத்திவிடாதே. |

| | |
|---|---|
| காப்பது விரதம் | தான் செய்யத் தொடங்கிய தருமத்தை விடாமல் செய்வதே விரதமாகும் (**அல்லது**)<br><br>பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் அவற்றைக் காப்பாற்றுவதே தவம் ஆகும் |
| கௌவை அகற்று | வாழ்வில் செயற்கையாக ஏற்படும் துன்பத்தை நீக்கு |
| சக்கர நெறி நில் | தர்மசக்கர நெறிப்படி வாழ வேண்டும். |
| சித்திரம் பேசேல் | பொய்யான வார்த்தைகளை மெய் போலப் பேசாதே. |
| சுளிக்கச் சொல்லேல் | கேட்பவருக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகும்படி பேசாதீர். |
| சேரிடம் அறிந்து சேர் | நீ பழகும் நபர்கள் நல்ல குணங்கள் உடையவர்களா என நன்கு ஆராய்ந்து பின்பு அவர்களுடன் பழகு. |
| தூக்கி வினை செய் | ஒரு வேளையை முடிப்பதற்கான வழிமுறைகளை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பு அச்செயலைச் செய்யத் தொடங்கவும் |
| தொன்மை மறவேல் | பழங்கால மற்றும் பண்டைய முறையிலான நம் தமிழ் கலாச்சாரத்தை விட்டுக் கொடுக்காமல் இயற்கையோடு ஒத்து வாழ வேண்டும் |
| நீர் விளையாடேல் | வெள்ளப் பெருக்கில் நீந்தி விளையாடாதே |
| நைவினை நணுகேல் | பிறர் வருந்தத் தகுந்த தீ வினைகளைச் செய்யாதே |

| | |
|---|---|
| பழிப்பன பகரேல் | பெரியோர்களால் பழிக்கப்படும் இழிவான சொற்களான பொய்,கடுஞ்சொல் ஆகியவற்றைப் பேசாதே. |
| பீடு பெற நில் | பெருமையை அடையும் படியான நல்ல நிலையிலே நில். |
| மிகைபடச் சொல்லேல் | சாதாரணமான விஷயத்தை மாயாஜால வார்தைகளால் பெரிதாகக் கூறாதே |
| மேன்மக்கள் சொல் கேள் | நல்லொழுக்கம் உடைய பெரியோர் சொல்லைக் கேட்டு நட. |
| வல்லமை பேசேல் | உன்னுடைய வலிமையை நீயே புகழ்ந்து பேசாதே. |
| ஓரஞ் சொல்லேல் | நம்மைச் சுற்றி உள்ளவர்களைப் பற்றி பிறரிடம் குறை சொல்லக் கூடாது |
| மொழிவது அற மொழி | சொல்லப்படும் பொருளைச் சந்தேகம் நீங்கும்படி சொல், |